DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 470 / 2026 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. பண்டாரம் |
| Father Name | மகாராஜன் |
| Village | வாழவள்ளான் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**<u>(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 18-06-2026.(நேரம்: 12.30PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது வாழவள்ளானில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. சாட்சி மகாராஜன் எனது அப்பா ஆவார் தற்போது இறந்துவிட்டார்.
4.அசா1 எனது அண்ணன் ஆவார்.
5.இவ்வழக்கின் ஆஜர் எதிரியை எனக்குதெரியாது.
6. வழக்குசம்மந்மாக எனக்கு எதுவும் தெரியாது.
7. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

(அ.சா 2 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 2 சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.04.2023 ஆம் தேதி அதிகாலை 05.30 மணியளவில் எனது அப்பா மகாராஜன் பால்குளம் TPS எடை நிலையத்திற்கு சற்று கிழக்கே மேற்கில் இருந்து கிழக்காக தனது ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் செல்லும்போது இவ்வழக்கின் ஆஜர் எதிரி TN72N 1939 அரசு பேருந்தை அதிவேகமாகவும் , ஆஜாக்கிரதையாகவும் ஓட்டியதில் எனது அப்பா மகாராஜனுக்கு சாதாரண காயங்களை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல.மேற்கண்ட சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு அசா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.